**செய்தி வெளியீடு எண்:114** **நாள்:21.02.2013**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.சி.த.செல்லப்பாண்டியன் அவர்கள் இன்று (21.2.2013) தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறையில் கருணை அடிப்படையில் 32 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். மேலும், அடிப்படை பணியாளர்கள் 10 நபர்களுக்கு பதவி உயர்வு மூலம் இளநிலை உதவியாளர்களாக பணி நியமனத்திற்கான ஆணைகளையும் வழங்கினார்கள்.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கிடையே மாநில அளவில் நடைபெற்ற மாநில திறனாய்வு போட்டிகளில் 15 தொழிற்பிரிவுகளில் முதலிடம் பெற்ற 15 பயிற்சியாளர்களுக்கு சிறந்த பயிற்சியாளர் விருதாக ஒவ்வொருவருக்கும் தலா ரூபாய் 25,000/– ரொக்க பரிசும், பாராட்டுச்சான்றுகளையும் வழங்கி சிறப்பித்தார்கள்.

இவ்விழாவில் தொழிலாளர் துறை முதன்மை செயலாளர் திரு.மோகன்பியாரே, இ.ஆ.ப அவர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திரு.கோ.பிரகாஷ் இ.ஆ.ப அவர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**